WWW.TAMILMIXEREDUCATION.COM

TNPSC GROUP-IV EXAM (MODEL QUESTIONS AND ANSWER)



# டி.என்.பி.எஸ்.சி. குரூப்-4 தேர்வு

மாதிரி வினா-விடை 70

தொகுப்பு: சாம் ராஜேஷ்வரன்

## பொதுத்தமிழ் - இலக்கியம் - 11

366. கூற்றுகள்
   1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இவை சேர்ந்ததே பதினெண் மேல்கணக்கு நூல்கள் எனப்படும்.
   2. பதினெண் மேல்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள்
   3. பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருள் பற்றிய நூல்கள்

   a. 2 தவறு b. 1,2 தவறு c. 1,2,3 தவறு
   d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

367. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறியவர் யார்?
   a. மாணிக்கவாசகர் b. சுந்தரர்
   c. திருநாவுக்கரசர் d. திருஞானசம்பந்தர்
   e. விடை தெரியவில்லை

368. 'தேம்பாவணி' என்பது
   a. கிறிஸ்தவக் காப்பியம் b. இசுலாமியக் காப்பியம்
   c. வைணவக் காப்பியம் d. சைவக் காப்பியம்
   e. விடை தெரியவில்லை

369. தனிப்பாடல் திரட்டு தொகுத்தவர், தொகுப்பித்தவர் வரிசை முறையே
   a. காளமேகப்புலவர், பொன்னுசாமி
   b. பொன்னுசாமி, சந்திர சேகர கவிராச பண்டிதர்
   c. சந்திரசேகர கவிராச பண்டிதர், பொன்னுசாமி
   d. காளமேகப்புலவர், பொன்னுசாமி
   e. விடை தெரியவில்லை

370. திருப்பனந்தாளிலும், காசியிலும் தம் பெயரால் மடம் நிறுவி உள்ளவர்
   a. இராமலிங்க அடிகளார் b. தாயுமானவர்
   c. குமரகுருபரர் d. வில்லிபுத்தூரார்
   e. விடை தெரியவில்லை

371. மயிலேறும் பெருமாளிடம் கல்வி கற்றவர்
   a. சுவாமிநாத தேசிகர் b. வீரமாமுனிவர்
   c. சி. இலக்குவனார் d. மீனாட்சி சுந்தரனார்
   e. விடை தெரியவில்லை

372. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
   திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"
   இத் திருமந்திரப்பாடல் இடம் பெற்ற தந்திரம் எது?
   a. ஆறாம் தந்திரம் b. இரண்டாம் தந்திரம்
   c. மூன்றாம் தந்திரம் d. எட்டாம் தந்திரம்
   e. விடை தெரியவில்லை

373. 'அஷ்டப்பிரபந்தம்' கீழ்க்கண்டவற்றுள் எதனைக் குறிக்கும்?
   a. எட்டு சிற்றிலக்கியங்கள்
   b. எட்டு பெருங்காப்பியங்கள்
   c. ஆறு நூல்கள்
   d. ஒன்பது உரைகள்
   e. விடை தெரியவில்லை

374. "நல்லது செய்த லாற்றீ ராயினும்
   அல்லது செய்த லோம்பு மினது தான்"
   என்ற வரிகள் இடம் பெற்ற நூல் எது?
   a. அகநானூறு b. புறநானூறு c. திருக்குறள்
   d. ஐங்குறுநூறு e. விடை தெரியவில்லை

375. "நேர நிகர அன்ன இன்ன
   என்பவும் பிறவும் உவமத் துருபே"
   என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
   a. தொல்காப்பியம் b. நன்னூல்
   c. யாப்பெருங்கலக் காரிகை d. அகத்தியம்
   e. விடை தெரியவில்லை

376. "அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
   உளமனைய தண்ணளித்தாய் உறுவேளில் பரிவகற்றி"
   – இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் யாது?
   a. பெரிய புராணம் b. திருவிளையாடற்புராணம்
   c. சிலப்பதிகாரம் d. சீறாப்புராணம்
   e. விடை தெரியவில்லை

377. திருவிளையாடற் புராணத்தில் உள்ள காண்டங்களில் பொருந்தாத காண்டத்தின் பெயரினைத் தேர்ந்தெடு.
   a. மதுரைக் காண்டம்
   b. கூடற் காண்டம்
   c. வஞ்சிக் காண்டம்
   d. திருவாலவாய்க் காண்டம்
   e. விடை தெரியவில்லை

378. "நரை முடித்துச் சொல்லால் முறை செய்தான்"
   இத்தொடரில் குறிப்பிடப்படுகின்ற அரசன் யார் என்று தேர்ந்தெடு.
   a. முதலாம் குலோத்துங்கன் b. இராசராசன்
   c. கரிகாலன் d. பராந்தகன்
   e. விடை தெரியவில்லை

379. 'மணிமேகலை' அமுதசுரபியைப் பெற்றிட உதவியவர்.
   a. மணிமேகலா தெய்வம் b. சுதமதி
   c. தீவதிலகை d. அறவண அடிகள்
   e. விடை தெரியவில்லை

380. "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
   புன்கண் அஞ்சும் பண்பின்
   மென்கண் செல்வம் செல்வமென் பதுவே'
   – இப்பாடல் வரிகளைப் பாடியவர் யார்?
   a. முன்றுறை அரையனார்
   b. காரியாசான்
   c. மிளைகிழான் நல்வேட்டனார்
   d. கணிமேதாவியார்
   e. விடை தெரியவில்லை

381. திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர்
   a. அடியார்க்கு நல்லார்
   b. அரும்பத உரைகாரர்
   c. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
   d. பெரியவாச்சான் பிள்ளை
   e. விடை தெரியவில்லை

382. "பெருஞ் சூலையினால், அட்கொள்ள, அடைந்துய்ந்த தெருளும் உணர்வில்லாத சிறுமையேன் யான் என்றார்"
   – இவ்வடிகள் யாரை குறிப்பிடுகிறது?
   a. சம்பந்தர் b. சுந்தரர்
   c. மாணிக்கவாசகர் d. நாவுக்கரசர்
   e. விடை தெரியவில்லை

383. பொருந்தாத இணையினைக் கண்டறிக.
   a. இராசராச சோழனுலா – ஒட்டக்கூத்தர்
   b. திருவேங்கடத்தந்தாதி – பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
   c. மதுரைக் கலம்பகம் – குமரகுருபரர்
   d. முக்கூடற்பள்ளு – நாத குத்தனார்
   e. விடை தெரியவில்லை

384. 'உலகப் பொதுமறை' எனப்போற்றப்படும் நூல் எது?
   a. திரிகடுகம் b. திருவள்ளுவமாலை
   c. திருக்குறள் d. திருவிளையாடற்புராணம்
   e. விடை தெரியவில்லை

385. சயங்கொண்டாரின் சமகாலப் புலவர் யார்?
   a. கம்பர் b. நக்கீரர்
   c. ஒட்டக்கூத்தர் d. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
   e. விடை தெரியவில்லை

386. தமிழ்விடு தூதில் அமைந்துள்ள கண்ணிகளின் எண்ணிக்கை
   a.268 b. 628 c. 228 d. 618
   e. விடை தெரியவில்லை

387. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் குறிப்பிடுக.
   a. திரிகூடராசப்ப கவிராயர் b. அழகிய பெரியவன்
   c. பெரியவன் கவிராயர் d. இவர்களில் யாருமிலர்
   e. விடை தெரியவில்லை

388. நீலகேசி எப்பாவால் எழுதப்பட்டது?
   a. வஞ்சிப்பா b. விருத்தப்பா c. வெண்பா d. கலிப்பா
   e. விடை தெரியவில்லை

389. முக்கூடற் பள்ளுக்குரிய பாவகை
   a. சிந்துப்பா b. ஆசிரியப்பா
   c. வஞ்சிப்பா d. வெண்பா
   e. விடை தெரியவில்லை

390. கம்பன் சொன்ன வண்ணங்கள் எத்தனை?
   a. 96 b.95 c. 94 d.97
   e. விடை தெரியவில்லை

391. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும், ஒருங்கே காட்டும் காவியம் எது?
   a. பெரிய புராணம் b. கம்ப இராமாயணம்
   c. சிலப்பதிகாரம் d. மணிமேகலை
   e. விடை தெரியவில்லை

392. சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர் யார்?
   a. அனுமன் b. இராவணன் c. இலக்குவன்
   d. இராமன் e. விடை தெரியவில்லை

393. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப் பெயர்களில் ஒன்று
   a. கண்ணகி காதை b. சிலப்பதிகாரம்
   c. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
   d. இராமகாதை
   e. விடை தெரியவில்லை

394. திருநாவுக்கரசர் பிறந்த ஊர்
   a. திங்களூர் b. திருவாமூர்
   c. திருவழுந்தூர் d. திருவாதவூர்
   e. விடை தெரியவில்லை

395. 'செப்புத் திருமேனிகளின்' பொற்காலம் என்று அழைக்கப்பட்ட காலம் எது?
   a. சோழர் காலம் b. சேரர் காலம்
   c. பாண்டியர் காலம் d. நாயக்கர்கள் காலம்
   e. விடை தெரியவில்லை

396. 'உலகம் உருண்டை' என்ற கருத்து எவ்வறிவியல் இயலின் பாற்படும்?
   a. விண்ணியலறிவு b. பொறியியல் அறிவு
   c. மண்ணியல் அறிவு d. அணுவியல் அறிவு
   e. விடை தெரியவில்லை

397. 'கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்மேன்'
   – இப்பாடலடி யாரைக் குறிக்கிறது?
   a. கண்ணகி b. சீதை c. பாஞ்சாலி d. குந்தி
   e. விடை தெரியவில்லை

398. குறிப்பினால் உணரும் கொள்கையான் யார் ?
   a. அனுமன் b. இராவணன் c. வீடணன்
   d. இராமன் e. விடை தெரியவில்லை

399. போலிப் புலவர்கள் கூட்டம் பெருகாமல் தலையை வெட்டியப் புலவர் யார்?
   a. ஒட்டக்கூத்தர் b. வில்லிபுத்தூரார்
   c. அதிவீரராமபாண்டியன் d. தொல்காப்பியர்
   e. விடை தெரியவில்லை

400. பொருட்பாவில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
   a.70 b. 25 c. 38 d. 30
   e. விடை தெரியவில்லை

401. பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றாகிய சிறுபஞ்ச மூலத்தில் கூறப்படாத மூலிகைத் தாவரவேர்
   a. கண்டங்கத்தரி b. சிறுவழுதுணை
   c. தூதுவளை d. நெருஞ்சி
   e. விடை தெரியவில்லை

402. கலிங்கமன்னன் அனந்தியன்மன் மீது போர் தொடுத்து வெற்றி பெற்றவன் யார்?
   a. முதல் குலோத்துங்கச் சோழன்
   b. மூன்றாம் குலோத்துங்கச் சோழன்
   c. இராசராச சோழன்
   d. இராசேந்திர சோழன்
   e. விடை தெரியவில்லை

403. முதற் குலோத்துங்க சோழனின் படைத்தளபதி யார்?
   a. கருணாகரத் தொண்டைமான் b. புருடோத்தமன்
   c. தாண்டவராயன் d. மகேந்திரவர்மன்
   e. விடை தெரியவில்லை

404. துரியோதனனின் தந்தை பெயர்
   a. சகுனி b. விதுரன் c. அர்ச்சுனன்
   d. திருதராட்டினன் e. விடை தெரியவில்லை

405. மணிமேகலையின் தோழி
   a. தீவதிலகை b. சுதமதி c. மாதரி d. வீணாபதி
   e. விடை தெரியவில்லை

406. 'பட்டிமண்டபம்' என்பது சமயக்கருத்துகள் விவாதிக்கும் இடம் என்று கூறும் நூல்
   a. சிலப்பதிகாரம் b. மணிமேகலை c. நீலகேசி
   d. குண்டலகேசி e. விடை தெரியவில்லை

407. புறநானூற்றில் உள்ள புறத்திணைகளின் எண்ணிக்கை எத்தனை?
   a. ஐந்து b. பதினொன்று c. பத்து d. ஏழு
   e. விடை தெரியவில்லை

408. பாடல் வரிகள் கலித் தொகையில் எப்பிரிவில் இடம் பெற்றுள்ளன?
   ஏற்றனர் மார்பு
   கவிழ்ந்தன மருட்பு
   கலங்கினர் பலர்
   a. குறிஞ்சிக் கலி b. முல்லைக் கலி c. மருதக் கலி
   d. நெய்தல் கலி e. விடை தெரியவில்லை

409. "ஈயென இரத்தல் இழிந்தன்று ; அதன் எதிர்
   ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;"
   கூற்று 1: இப்பாடலடிகளைப் பாடியவர் கழைதின் யானையார்
   கூற்று 2: இப்பாடலில் புகழப்படும் வள்ளல் பாரி
   a. கூற்று இரண்டும் சரி b. கூற்று 2 மட்டும் சரி
   c. கூற்று 1 மட்டும் சரி d. கூற்று இரண்டும் தவறு
   e. விடை தெரியவில்லை

410. "நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை"
   இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்
   a. தேவாரம் b. கம்ப இராமாயணம்
   c. பெரிய புராணம் d. சீறாப்புராணம்
   e. விடை தெரியவில்லை

### விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 366 a | 367 c | 368 a | 369 b | 370 c |
| 371 a | 372 c | 373 a | 374 b | 375 b |
| 376 a | 377 c | 378 c | 379 c | 380 c |
| 381 d | 382 d | 383 d | 384 c | 385 c |
| 386 a | 387 c | 388 b | 389 a | 390 a |
| 391 a | 392 a | 393 c | 394 b | 395 a |
| 396 a | 397 b | 398 d | 399 a | 400 a |
| 401 c | 402 a | 403 a | 404 d | 405 b |
| 406 b | 407 b | 408 b | 409 c | 410 d |

நாளை பொதுத்தமிழ் – இலக்கியம் பாட கேள்வி–பதில்கள் தொடரும்.